தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6

மலர் 4 | சென்னை | 26-4-58 | சனிக்கிழமை | இதழ் 41



தியாகராஜன் சாட்சியாக!

''வடநாடு வளர்கிறது; தென்னாடு தேய்கிறது என்பதைத் தவிர இந்தத் தி. மு. க. வுக்கு என்ன தெரியும்'' என்று காங்கிரஸ் அமைச்சர்களிலிருந்து அத்தனைபேரும் பேசுகிருர்கள். உண்மையிலேயே வடநாடு வளரத்தான் செய்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்கு எனக்கொரு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. மூன்று திங்கள்களுக்கு முன்னுல் நான் டில்லிக்குப் போயிருந்தேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் கருத்திருமன், 'தேனி' தியாகராசன் ஆகியோரும் பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த பழனிச்சாமியும் அந்தச் சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டார்கள். வடநாட்டில் பல முக்கியமான இடங்களைப் பார்த்தோம். வடநாடு வளருகிறதா? டில்லி சர்க்கார் தென்னுட்டைப் புறக்கணிக்கிறதா? என்று சந்தேகப்படுவோர் ஒருமுறை வடநாட்டுக்குப் போய்வந்தால் நிச்சயமாக உண்மையை உணர்ந்து, தி. மு. கழகம் சொல்லுவதை நம்புவார்கள். நான் ஏதோ, ஆதாரமில்லாத தகவல்களை எழுதியிருக்கிறேன் என்று எண்ணிவிடாதீர்கள்.

வடநாட்டில் எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் நாம் 'பெட்டிக்கடை' என்று சொல்லும் சிறிய கடைகளில்கூட சிறு சிறு சாமான்கள் செய்யக்கூடிய அளவுக்கு அங்கே வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. சைக்கிள் மணி, போக்ஸ் கம்பி போன்ற சிறிய பொருள்கள் கடைத்தெருவின் பல இடங்களில் செய்து குவித்துக்கொண்டிருப்பதை நாங்கள் பார்த்தோம். நாங்கள் என்று இங்கே நான் குறிப்பிடுவது நம்மை ஏளனம் செய்யும் காங்கிரஸ்காரர்களையும் பொதுவுடமைக் கட்சிக்காரரையும் சேர்த்துத்தான்.

எங்கெங்கே தொழில் ஆதிக்கத்தை நான் கண்டேனோ அங்கெல்லாம், உடனிருந்த மாற்றுக்கட்சி எம். எல். ஏ. க்களுக்கு சுட்டிக்காட்டினேன். ஒவ்வொன்றுக்கும் அவர்கள் என்ன சொன்னார்கள்? 'இதை ஒன்றை வைத்தே சொல்லமுடியுமா?'' என்று எல்லா ஆதாரங்களுக்குமே சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

சென்னையில் தொழில் நடத்தும் ஒரு பெரிய வடநாட்டுக்காரரை நாங்கள் எங்களுடைய சுற்றுப்பயணத்தில் அங்கே கண்டோம். அவரும் நாங்களும் நெடுநேரம் உரையாடிக்கொண்டிருந்தோம். அப்போது அவர், ''நீங்கள் எங்கள் தேசத்தில் என்ன அதிசயத்தைப் பார்த்தீர்கள்?'' என்று கேட்டார்.

''எங்கு பார்த்தாலும் தொழில் மயமாக இருக்கிறது!'' என்றேன் நான்.

''வேறு என்ன பார்த்தீர்கள்?'' என்ருர் அவர்.

''வேறு ஒன்றுமில்லையே!'' நான்.

''எங்கள் தேசத்தில் பிச்சைக்காரர்களைப் பார்த்தீர்களா?'' என்ருர் அந்த வடநாட்டுக்காரர்.

''என்ன, பார்த்தோமா?'' என்று நான் 'தேனி' தியாகராசனைப் பார்த்தேன். அவர் கருத்திருமனைப் பார்த்தார். கருத்திருமன் பழனிச்சாமியைப் பார்த்தார்.

முடிவில் 'இல்லை' என்று நான் அவருக்குப் பதிலிறுத்தேன்.

அந்த வியாபாரி திருப்திப்பட்டார். ஆனுல் அடுத்து அவர் சொன்னதுதான் என் இதயத்தைக் குடைந்தது. என்ன அப்படிச் சொன்னுர்?

''நீங்கள் தப்பித்தவறி பிச்சைக்காரர்களைப் பார்த்தாலும் அவர்கள் உங்கள் தேசத்துக்காரர்களாகத் தானிருக்கும்.'' என்ருர். எனக்குச் சுரீர் என்றது. நான் 'தேனி' தியாகராசனைப் பார்த்தேன். என்னுடைய பார்வையில், ''பார்த்தீர்களா? திராவிட நாடு திராவிடருக்கே என்ருல் அடுக்குமொழி என்கிறீர்களே இப்போது என்ன சொல்கிறீர்கள்? என்ற பொருள் இருந்தது. அதை அவர் புரிந்துகொள்ளாமலில்லை. புரிந்துகொண்டதால்தான் எனக்கு எதுவுமே பதில் சொல்லாமல் கருத்திருமன் பக்கம் திரும்பிவிட்டார். இன்னும் இதுபோன்ற பல சம்பவங்களை நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன்.

காங்கிரஸ்காரர்கள் இங்கிருந்துகொண்டே, நமது பிரிவினைக் கருத்துக்களுக்கு வீம்புடன் பதில் பேசிக்கொண்டிருப்பதிலே அர்த்தமில்லை. எவ்வளவு பெரிய தீவிரக் காங்கிரஸ் வாதியானுலும் அவர் ஒருமுறை வடநாட்டுக்குப் போய்வந்தால் அவரது உறுதி ஆட்டங் கண்டுவிடும் என்பது திண்ணம்.

சொற்சொல்வர் ஈ. வி. கே. சம்பத அவர்களும் நானும் ராணுவ வீரர்களின் படங்கள் மாட்டப்பட்டிருந்த ஒரு பெரிய கூடத்துப் பக்கமாகப்போனேம். உலகப் பெரும்போரில் அடிபட்டு மாண்டவர்களின் உருவப் படங்களும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்று உயிர் நீத்தவர்களின் உருவப்படங்களும் அங்கே தொங்கவிடப்பட்டிருந்தன. ஒவ்வொரு படத்திற்கும் கீழேயும் அவர்கள் எந்த மொழி பேசும் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று எழுதப்பட்டிருந்தது. வங்காளி, குஜராத்தி—இப்படி பல மொழிக்காரர்களின் படங்களோடு ஒரு தமிழ் வீரனின் படமும் இருந்தது. அந்தப் படத்திற்குக் கீழே 'தமிழன்' என்று எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் **'பறையன்'** என்றும் எழுதியிருந்தது. என்ன செய்வது? படத்தைப் பார்த்த எங்கள் மனம் கொதிக்கத்தான் செய்தது? யார் யாரோ எது எதற்கோ டில்லிக்குப் போகிருர்கள். இதையெல்லாம் அவர்கள் பார்க்கிருர்களா? பார்த்தாலும் உடம்பில் உணர்ச்சி ஊருகிறதா? இப்படிப்பட்ட உண்மைகளை நாம் எடுத்துச் சொன்னுலும் நம்ப மறுக்கிருர்கள்.

காங்கிரஸ்காரர்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள் : **''நீங்கள் தி. மு. க.வின் அரசியல் கொள்கையை எதிர்க்கிறீர்களா? தயவுசெய்து ஒருமுறை டில்லிக்குப் போய்வாருங்கள்.''** ★

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

முதுரை விளக்கம்
முருகசுப்பிரமணியன்

சினம் தீது! நமக்கு ஆகாது!

கோபம் பொல்லாத நெருப்பு. அது பிறரை அழித்தலோடு தான் பிறக்கும் இடத்தையும் அழித்துவிடும். ''சினத்தை அடக்கிடவேண்டும். அது உனக்கே கெடுதியைத் தூண்டும்'' என்று பாரதிதாசன் சிறுவர்களுக்கு அறிவுரை கூறுகிருர்.

கோபம் உள்ளவர் செத்தவர்களுக்குச் சமமானவர்; சினத்தைத் துறந்தவர் சாவினையொழித்த பெரியோர்களுக்குச் சமமானவர்; இப்படி வள்ளுவர் கூறுகிருர். 'உன்னைக் காத்துக் கொள்ளவேண்டுமானுல் உன்னிடம் சினம் வாராமல் காத்துக் கொள்; இல்லையேல் அது உன்னையே கொன்றுவிடும்' என்று அவர் எச்சரிக்கை விடுக்கிருர்.

கோபத்தால் கெட்ட குடிகள் பல; கோபத்தால் அழிந்த மன்னர்கள் பலர்; கோபத்தால் வீழ்ந்த நாடுகள் பல.

கோபம் நன்மை பயக்குமென்று யாரும் சொல்லவே இல்லை; கோபத்தினுல் வரும் தீமைகள் இடத்திற்கேற்ப, காலத்திற்கேற்ப மாறுபடலாம், அவ்வளவுதான். கோபம் தீமை பயப்பதென்பது மறுக்கமுடியாத உண்மை.

வீட்டில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கோபம் வந்தால் ஒரே அல்லோலகல்லோலம் தான். அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டால் சட்டிமுட்டியெல்லாம் உடைபடும். சமயத்தில் சாப்பாட்டிலும் மண்விழும். அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டால் பிள்ளைகளுக்குச் சரியான உதை கிடைக்கும். கண்மண் தெரியாமல் கோபத்தில் பிள்ளைகளின் மீது மேசை நாற்காலியைப் போட்டு உடைப்பவர்களும் உண்டு. அண்மையில் ஒரு செய்தி வந்தது. ஒரு தாயார் தன் பையன் படுக்கையில்சிறுநீர் கழித்துவிட்டான் என்பதற்காக அவனை அடி அடியென்று அடித்துக் கொன்றேவிட்டாளாம். அவள்மீது போலீசார் வழக்குத் தொடுத்திருக்கிருர்கள்.

கோபம் எல்லைமீறும்போது மனிதன் மிருகமாகிவிடுகிருன். அவன் அறிவே மங்கிவிடுகிறது. பெற்ற பிள்ளையைச் சாகடிக்கும் அளவு தாயாரைக் கோபம் கொடுமைக்காரியாக்கிவிடுகிறது!

அன்புக்கு நேர் எதிரி சினம். கோபம் அன்புக்கும் இரக்கத்திற்கும் அறிவுக்கும் எமன்.

போன்று மீண்டும் கூட்டமுடியாததாக-நிரந்தரமானதாக ஆகிவிடும்.

கடுமையான கோபத்தின் காரணமாகக் கீழ்மக்கள் என்றுமே ஒன்றுசேர முடியாதபடி பிறரைப் பகைத்துக்கொண்டு விடுவர். கயவருடைய கோபத்தின் விளைவு இத்தகையது! அது கற்பிளவைப் போன்ற பகைமையை ஏற்படுத்திவிடும்.

கீழ்மக்களுக்கு மேம்பட்டவர்கள், ஆனுல் சான்ருேருக்குத் தாழ்ந்தவர்கள் ஆகிய இடைநிலை மக்களின் கோபம் எத்தகையது?

அவர்களின் கோபத்தாலும் பகைமையும் சண்டையும் மனவேறுபாடும் விளையும். ஆனுல் அந்தப் பகைமை பொற்பிளவை ஒக்கும். தங்கக் கட்டியில் ஏற்படும் பிளவை அவர்களின் கோபத்திற்கு உவமையாகச் சொல்லலாம். தங்கக்கட்டி உடைந்து விட்டால், அதனை உருக்கி மீண்டும் ஒன்றுசேர்க்க முடியும். அதுபோன்று இடையாயர் கோபத்தால் மனம் வேறுபட்டாலும், உருக்கி ஒன்றுசேர்க்க இடமளிக்கும் பொன்போலப் பிறர் கூட்டக்கூடுவர்; பகை

ணீரை நொடிப்பொழுது இரண்டாகப் பிரிக்கிறது. நாம் கண்ணை மூடிக் கண்ணைத் திறப்பதற்குள் பிரிந்த தண்ணீர் மீண்டும் ஒன்று சேர்ந்துவிடுகிறது. பிரிந்த அடையாளம் சிறிதும் இன்றி அத்தனை வேகமாக மறைந்துவிடுகிறது.

இவ்வாறு அம்புக்கு ஆட்பட்டு நீரில் ஏற்படும் வடுப்போல நொடியில் பகைமையை மறக்கும் பண்பு பெரியவர்களுக்கு உண்டு. அவர்களுக்கு ஏற்படும் கோபத்தின் விளைவு அவ்வளவு விரைவில் மாறிவிடுகிறது; கோபம்உள்ள இடத்தில் குணம் உண்டு என்னும் பழமொழி அவர்களை நோக்கியே எழுந்தது போலும்!

சிறப்புமிக்க பெரியோருடைய கோபம், வில்லைப் பிடித்து அம்பினுலே பிளக்க நீரில் தோன்றும் வடுப்போல அப்போதேநீங்கும்.

அம்பு பாய்ந்தவுடன் நீரில் ஏற்படும் பிளவு அக்கணத்தே மறைந்து விடுகிறது. சற்று அயர்ந்துவிட்டால் அந்தப் பிளவு கூட நம் கண்ணில் தட்டுப்படாது.

பெரியோரின் சினம் மனவேற்றுமையை ஏற்படுத்தாது என்பதே கருத்து. சினத்தின்

கோபத்தில் மூன்று வகை!

தம்பி தங்கைகள் கோபத்தை மாதிரி பார்த்திருப்பீர்கள். நீங்கள் ஒழுங்காக வீட்டுக்கணக்கைச் செய்துகொண்டு போகாவிட்டால், உங்கள் ஆசிரியருக்கு எவ்வளவு கோபம் வரும்? உங்களை நாற்காலிமேல் ஏறி அரைமணி நேரம் நிற்கச் செய்வார். சில ஆசிரியர்கள் பிரம்பைக்கொண்டு தங்கள் கைவரிசையையும் காட்டுவர்; ஆனுல் குழந்தைகளை அடிப்பது இப்போது முறைப்படி குற்றம்.

ஆசிரியர்கள் கொடுங்கோலர்களாக ஆட்சி நடத்தியது அந்தக் காலம். எனக்கு நன்கு நினைவிருக்கிறது. ஒழுங்காகப் படிக்காத பிள்ளைகளுக்குக் காலில் விலங்குக்கட்டை போடுவது; கீழே எழுத்தாணியைக் குத்தி வைத்து, மேலே கயிற்றைப் பிடித்துத் தொங்கச் சொல்லிப் பிரம்பால் அடிப்பது (கோதண்டம்)-இத்தகைய பெரிய தண்டனைகளையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். நல்ல வேளையாக அனுபவித்ததில்லை.

இப்பொழுது ஆசிரியர்களின் கோபம் பிள்ளைகளைத் திருத்தும் வகையில் தண்டனை கொடுக்க வேண்டாத-காரியமென்பது கல்வியாளர்களின் கருத்து.

கோபத்தினுல் விளையும் தீங்குகளை இன்னும் எவ்வளவோ துரைக்கலாம்.

முதுரைப் பாட்டு கோபத்தை வகைப்படுத்திக் கூறுகிறது. மூன்றுவகையான சினத்தை ஒளவையார் நமக்குச் சுட்டிக் காட்டுகிருர்.

கயவருடைய சினம் ஒன்று; சான்ருேருடைய சினம் மற்ருென்று; இருவருக்கும் இடைப்பட்ட மக்களின் சினம் இன்னுென்று.

இம்மூவரின் சினமும் எப்படி இருக்குமென்று முதுரை விரித்துரைக்கிறது!

முதலில் பாட்டைச் சொல்லுகிறேன்:

கற்பிளவோ டொப்பர்
கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும்
போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய எய்த
வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்ருேர் சினம்.

கயவருடைய கடுமையானசினம் கற்பிளவைப் போன்ற பிரிவினையை, மன வேறுபாட்டை உண்டாக்கிவிடும்.

கீழோரிடம் கோபத்தினுல் ஏற்படும் பகைமை கல்பிளந்ததைப்

மையை மறந்து மீண்டும் நண்பர்களாகப் பழகுவர்.

பொன்னின் பிளவு தற்காலிகமானது. அப்பிளவைப் போக்கிவிட முடியும். அதுபோலவே இடைநிலை மக்களின் சினத்தினுல் விளையும் வேற்றுமையையும் நீக்கிவிடுவது எளிது.

அவர்களின் கோபம் பகைமையை ஏற்படுத்துமெனினும், கற்பிளவைப் போன்ற நிரந்தரமான பகையை உண்டாக்காது. இரண்டு நண்பர்கள் பார்த்துச் சொன்னுல் ஆத்திரம் தணிந்து பகைமையை மறந்து, நண்பர்களாகப் பழக முன்வருவர் இடைப்பட்ட நல்லவர்கள்.

சான்ருேர் சினம் எத்தகையது? பெரியவர்களின் கோபம் எப்படிப்பட்டதென்பதற்கு ஒளவைப் பாட்டி சொல்லும் உவமை மிக அருமை. இதனைவிடப் பொருத்தமாக வேருெரு உவமை சொல்ல முடியுமா என்ருல் முடியாதென்றே சொல்லவேண்டும்.

ஆற்றிலே நீர் ஓடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் கரையிலே அமர்ந்திருக்கிறீர்கள். உங்கள் கையில் வில்லும் அம்பும். ஆற்று வெள்ளத்தின்மீது உங்கள் அம்பைப் பாய்ச்சுகிறீர்கள். வெள்ளத்தின்மீது பாயும் அம்பு, தண்

வசப்பட்டுப் பெரியவர்கள்மனத்தில் பகைமையை வளர்க்கமாட்டார்கள். அந்தப் பகைமை கயவர் உள்ளத்தில் நிரந்தரமாகவும், இடைப்பட்ட நல்லார் உள்ளத்தில் தற்காலிகமாகவும் வளர்கிறது. ஆனுல் பெரியவர் மனத்திலோ பகைமை கணப்பொழுது கூட வேர்கொள்வதில்லை. நீரில் தோன்றும் வடுப்போல, பெரியோரின் பகைமை கானல்நீர்! அதனை மாயை என்றே சொல்லலாம். தோன்றுவது ஒருகணம்; மறைவது மறுகணம். ஒரு நொடி கூட அந்த வடு நீரில் நிற்பதில்லை. அது போன்றதே பெரியோரின் சினமும். அதுபோன்றதே பெரியோரின் சினமும்.

சீரொழுகு சான்ருேர் சினம் என்று அழகாகச் சொல்கிருர் ஒளவையார். அந்தச் சொற்களைப் படிக்கும்போது அத்தகைய கோபம் நமக்கும் வந்தால் நல்லதென்றே தோன்றுகிறது. கோபத்தின்மீது நமக்கு ஏற்படும் கோபத்தையெல்லாம் மறந்து, கோபத்தின்மீது நாம் காதல் கொள்ள ஆரம்பித்து விடுகிருேம். சீரொழுகு சான்ருேர் சினம் அத்தகைய இனிய சினமாகும்.

— 3-ம் பக்கம் —

> ''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !''

எண்ணம்

மலர் 4 ‖ 26—4—58 ‖ இதழ் 41

ஜெகஜீவன் சொற்பொழிவு!

உலகில் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் பாழ்படுத்தும் ஒரு தனிப்பட்ட தீயசக்தி, அந்தச் சமுதாயத்தின் அழிவிற்கே வழிகோலாக அமைந்துவிடுகிறது. இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்த மட்டில், உத்தமர் காந்தியார் சாதித்த சாதனைகளில் சிறந்ததும் முக்கியமானதுமாக நாடெல்லாம் கருதிக்கொண்டிருப்பது அவர் சாதியை ஒழிக்கப் பாடுபட்டார் என்பதுதான். ஆனல் அவருக்குப் பின்னல் காங்கிரஸ் கட்சி அவர் விட்ட பணியைத் :தொடர்ந்ததா என்ருல்—கிடையாது. அதற்கு மாருக, காந்தியாரின் சாதி ஒழிப்புத் திட்டத்தைப் படுசூரணமாக்கி வருகிறது காங்கிரஸ் கட்சி. எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து 'ஜாதியை ஒழிக்கவேண்டும்' என்று ஒருமுகமாகப் பேசினல், கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றினல் வீம்புக்காகவே காங்கிரஸ் கட்சி எதிர்த் தீர்மானம் போடுகிறது.

''ஜாதிப் பெயர்களை அழிக்கமுடியாது'' என்பது காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம் பெற்றிருக்கும் நகரசபைகள், ஊராண்மைக் கழகங்கள் நிறைவேற்றி வரும் தீர்மானங்கள்.

இப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கு இப்போது என்ன அவசியம் நேர்ந்தது ? அதுவும், ஒரு முற்போக்குச் சக்தியை எதிர்க்கும் வகையில் தீர்மானங்கள் ஏன் நிறைவேற்றவேண்டும் ? இதிலிருந்து, ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளுக்கு எதிரான கருத்துக்களையே எப்போதும் கொண்டிருக்கவேண்டும் என்ற முடிவுகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையில் வடக்கிலிருந்து ஒரு இனிய குரல் கேட்கிறது ! அது ஜாதியை – மதத்தை எதிர்க்கும் குரல் !

ஐதராபாத்தில் நடைபெற்ற அகில இந்திய பின் தள்ளப்பட்டோர் மாநாட்டைத் துவக்கிப் பேசிய டில்லி அமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்கள் ஜாதிப் பித்துக்கொண்டவர்களையும், மதவாதிகளையும் கடுமையாகக் கண்டித்துப் பேசியிருக்கிருர்.

''ஜாதி இந்துக்களிடம் மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்குத் தெளிவான ஆதாரம் கிடைக்கும்வரை பின்தள்ளப்பட்டவர்களுக்கு சலுகைகள் நீடிக்க வேண்டும்'' என்று அமைச்சர் கூறுகிருர். அவரது குரலில் துயரம் தொனிக்கிறது.

பொறுப்புள்ள பதவியில் இருப்பவர், பலவகைப்பட்ட மனிதர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றவர், மிகப் பெரிய அரசியல் வாதிகளைக் கண்டு பேசுபவர், கூறுகிருர், 'ஜாதி இந்துக்களிடம் மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரம் கிடைக்கும்வரை தாழ்த்தப்பட்டவர்களுக்கு சலுகைகள் நீடிக்க வேண்டும்' என்கிருர். இந்த எண்ணம் அவர் உள்ளத்தில் எவ்வளவு ஆழம் பதிந்து கிடந்திருக்கவேண்டும் ! ஜாதி இந்துக்களின் வெறி உணர்ச்சி தணிவது சாதாரணமல்ல என்பதை உணர்ந்து அவர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உத்தரவாதம் கேட்கிருர்.

ஜாதி ஒழிந்துவிட்டதென்றும், இப்போதெல்லாம், நாட்டில் ஜாதி வித்தியாசம் கிடையாதென்றும் பேசும் காங்கிரஸ் பிரமுகர்களின் இதயங்களையெல்லாம் ஜகஜீவன்ராமின் சொற்பொழிவு அறுத்தாலும் அதில் ஆச்சரியமில்லை.

''மனிதர்களிடையே சமத்துவம் பற்றி வேறு எந்த நாடும் இவ்வளவு உயர்வாகப் பேசியதும் இல்லை. அதேபோல அதே நேரத்தில் மனிதர்களுக்கிடையே திட்டமிட்ட கொடூரமான பாகுபாட்டினைக் கடைப்பிடிக்கும் நாடு இந்தியாவைத் தவிர வேறு இல்லை''—இதுவும் ஜகஜீவன்ராம் சொற்பொழிவுதான். மதவெறி பிடித்தவர்களின் மிருக உணர்ச்சியை அளந்து, அமைச்சர் அனலைக் கக்கியிருக்கிருர். 'திட்டமிட்ட பாகுபாடு' என்று அவர் கூறியிருப்பதின் பொருள் இந்துமத மோகம் பிடித்தவர்களின் காட்டுமிராண்டித்தனத்தையே குறிப்பிடுவதாக அமைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இந்தியப் பேரரசு என்னும் பற்சக்கரத்தில் ஒரு முக்கியமான பகுதியாக விளங்கும் ஜகஜீவன்ராமின் கருத்தே இப்படியென்ருல் எந்தக் காலத்தில் காங்கிரஸ் உயர்வு தாழ்வற்ற சமுதாயத்தை உண்டாக்கப்போகிறது ?

தென்னுட்டுத் 'தேசியத்தம்பிரான்'கள் இதை எப்போது உணரப் போகிருர்கள் ?

★

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

பிளந்த கல், பிளந்த பொன், பிளந்த நீர் மூன்று உவமைகள். பிளந்த கல் மீண்டும் ஒன்று கூடல் இல்லை. கயவர் சினத்திற்கு ஆட்பட்டுச் சண்டை போட்டுக் கொண்டால், தீராத பகைவர்களாகிவிடுவர். அவர்களை மீண்டும் நண்பர்களாக்குவது நடவாத காரியம். பிளந்த கருங்கல் எங்காவது நெருங்கியிருக்கிறதா ?

பிளந்த பொன்னைப் பொற்கொல்லரிடம் தந்தால் உருக்கி ஒன்றுசேர்த்துவிடுவார். பழைய படி முழுத் தங்கக்கட்டி நமக்குக் கிடைத்துவிடும். இடைப்பட்ட நல்லவர்கள் சினவயப்பட்டு உள்ளத்தில் பகைமை கொண்டு பிரிய நேரினும், பிறர் சொல்லும் நல்லுரைகளைக் கேட்டு பகைமையை மறப்பர்; முன்போல மனவேற்றுமையின்றிப் பழகுவர். பிளந்த பொன்னைக் கூட்டுவது சாலும். அதுபோன்று கோபத்தாற் பிரிந்த நல்லவர்களைப் பிணைப்பதும் சாலும்.

இனிப் பிளவுபடும் நீரைக் கவனிப்போம்.

பிளவுபடும் நீர் யாரையும் எதிர்பாராது தானே ஒன்று சேர்ந்துவிடுகிறது. அதுவும் பிளவுபட்ட மறுகணமே கூடிவிடுகிறது. பொன்னைப் போலப் பொற்கொல்லர் வந்து அதனை ஒன்று சேர்க்க வேண்டியதில்லை. கருங்கல்லைப் போன்று எவர் முயன்ருலும் கூடாத நிலையும் இல்லை.

நீரில் ஏற்படும் வடுவும் சீரொழுகு சான்ருேர் சினமும் ஒன்று. இரண்டும் கணப்பொழுதில் மறைந்துவிடுவன. நீரில் ஏற்படும் வடு மறைந்து விடுகிறது; சான்ருேர் சினத்தை மறந்துவிடுகிருர்கள்.

'கோபம் கொடிது' என்று குறிப்பிடும்போது கயவரின் சினத்தையே நாம் சொல்லுகிருேம். 'கோபத்தில் அறுத்த மூக்கு சந்தோஷத்தில் வருமா ?' என்று ஒரு பழமொழி. கயவர்களின் கோபம் அத்தகையது தான். அறுபட்ட மூக்கை மீண்டும் ஒட்டவைக்க முடியாது. இரண்டாகப் பிளக்கும் கருங்கல்லை மீண்டும் இணைக்கமுடியாது. கோபத்தால் பகை கொண்டு பிரியும் கீழ்மக்கள் மறுபடியும் சேர்வதென்பது இல்லை.

நடுத்தரப் பண்புள்ள நல்லவர்களின் கோபத்தை ஓரளவு சேர்த்துக்கொள்ளலாம். சிறிது காலம் பகைமை நிற்கிறதென்ருலும் என்றுமே தீராத கருங்கற் பகைமையாக அது ஆவதில்லை. என்ருவது ஒருநாள் திரும்பச் சேரும், வாய்ப்பும் பகைமை தீரும்வாய்ப்பும் உண்டு. உடைந்த தங்கக்கட்டி உருக்கினல் சேர்ந்து கொள்ளும்; அதுபோல நல்லவர்களும் யாராவது அறிவுறுத்தினல் பகையை விட்டொழித்து உறவு கொள்வர்.

சான்ருேர் சினம் எல்லாவற்றுக்கும் மேலானது. நம் குழந்தைகளுக்கு ஔவை மூதாட்டி இப்பாட்டுமூலம் சொல்லும் நீதி என்ன ?

'ஆறுவது சினம்' என்று ஆத்திச்சூடியில் எடுத்த எடுப்பில் அறிவுறுத்திய ஔவையார் 'கோபப்படு' என்று ஒருபோதும் சொல்ல மாட்டார். கோபத்தை அடக்குதல் வேண்டும். கோபத்திற்கு இடந்தரக்கூடாது. கோபம் ஆட்கொல்லி. தம்பி தங்கைகள் கோபத்தை அடக்கப் பழகிக் கொள்ளவேண்டும். அதுவும் தன்னைவிட வலிமை குறைந்த அப்பாவிகளிடம் கோபப்படும் சூரத்தனம் வேண்டவே வேண்டாம். அது சூரத்தனமன்று, அசட்டுத்தனம்.

தன்னைவிட வலிமை வாய்ந்தவர்களிடம் கோபம் காட்டலாமா என்ருல், அதுவும் கூடாதென்றே சொல்வேன். அவர்களின் வல்லமை முன்பு நம் கோபம் எம்மாத்திரம் ? நம் கோபம் அவர்களை அழிக்காது, நம்மையே தீய்த்துவிடும். ஆகவே எந்நிலையிலும் கோபம் பொல்லாத நெருப்பு.

கோபம் அண்டாத மனப் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி என்ருே ஒரு நாள் யுகத்திற்கு ஒரு முறை சினம் வந்தாலும், அது சீரொழுகு சான்ருேர் சினமாக இருக்க வேண்டும். அந்தக் கோபம் வருவதும் தெரியக்கூடாது. போவதும் தெரியக்கூடாது. நீரில் எய்த அம்பு ஏற்படுத்தும் வடுப் போல நொடிப்பொதில் மறையும் சினமே மேல்.

அத்தகைய சினம், நாம் சான்ருேராக வளர்ந்தால்தான் நமக்கு வரும். நல்ல மனப்பண்பையும் சிறப்புகளையும் நாம் வளர்த்து வரவேண்டும். கோபத்தை அடக்கிக்கொள்ளப் பழகிக்கொண்டோமானல் போதும்; எல்லாச் சிறப்பும் நமக்கு எளிதில் கைகூடிவிடும்; பிறகு நமக்கு வரும் கோபம் சீரொழுகு சான்ருேரின் சினமாக இருப்பது திண்ணம். கயவரின் கற்பிளவுச் சினமும் இடைப்பட்டோரின் பொற்பிளவுச் சினமும் நம்மை அண்டா; நொடிப்போதும் நில்லாத நீர்ப்பிளவுச் சினமே நாம் விரும்புவது.

★

(மலாயா வானெலி தமிழ்ப் பள்ளிக் கூடப் பகுதியில் 21-3-58 அன்று ஒலிபரப்பப்பட்டது).

வெளிவந்து விட்டது!

தென்றல் வெண்பா
1000

விலை ரூபாய் 2-50.

விபரங்கட்கு :
மலர் நிலையம், 133, பிராட்வே, சென்னை-1.

10

அந்தக் கட்டு, பார்ப்பதற்கு பலமான இரத்தக்காயத்தை மூடிமறைத்திருக்கும்கட்டாகத் தோன்றியது. கட்டுக்கு மேல், ரத்தக்கறை உரைந்திருந்தது. அதேபோல் வலது கையிலே ஒரு கட்டு. பஞ்சவர்ணம் முகப்பு வாசலிலிருந்து தான் இருக்கும் இடத்திற்கு வருவதற்குள்ளாகவே, அம்பலகாரர், அதுவரை அவன்மீது வைத்திருந்த கோபத்தை மாற்றிக்கொண்டார். பஞ்சவர்ணத்தின் தோற்றம் அவ்வளவு பரிதாபமாக இருந்தது.

முதலில் அவனுக்கு உட்கார இடம் கொடுத்தார். அம்பலகாரர், அவருக்குச் சமமாக மற்றொருவருக்கு உட்கார இடம் கொடுப்பதே ஆச்சரியமான செயல். அவன் உட்கார்ந்தான். உட்காரும்போது அவன் ரத்தக்காயங்களால் மிகுந்த வேதனைக்குள்ளாகி யிருப்பதுபோல் தெரிந்தது. அவனது முகமும் விழியும் ஆயிரம் பாவங்களில் பேசி கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அம்பலகாரருடன் பவ்யமாகப் பேச ஆரம்பித்தான் பஞ்சவர்ணம்.

"ஐயா என்னைத் தெரிகிறதா? மறந்திருக்க நியாயமில்லை. என்மீது தீராக் கோபத்தில்கூட இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். பூவாத்தாள் இறந்த அன்று நான் இங்குதானிருந்தேன். அன்று உங்களுக்கு எதிரே கூட நான் தரக் குறைவாய் நடந்து கொண்டுவிட்டேன். உங்களுடைய கோபமும், மான்கொம்பு குடும்பத்தின் அலங்கோலமும் என்னை அந்த நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்டன. மன்னியுங்கள். என்ன இருந்தாலும் நீங்கள் அன்று அவ்வளவு கல்நெஞ்சுக்காரராக இருந்திருக்கக்கூடாது. அந்த ஆத்திரத்தில் தான் நான் குஞ்சரத்தை மான்கொம்புக்கு உதவிபுரிவதாக வாக்களித்து அதற்கான காரியங்களையும் செய்து கொடுத்தேன். ஆனால் அவர் குஞ்சரத்தையே தூக்கிச் சென்றுவிட வேண்டுமென்று சொன்னார். அதில் எனக்குத் துளியும் விருப்பமில்லை. பழிக்குப் பழி என்பது பசிக்குப் பனம் பழத்தைச் சாப்பிடுவது போன்றது என்றுகூட நான் அவருக்குப் பல முறை எடுத்துச் சொன்னேன். "எத்தனையோ வழிகள் இருக்கின்றன; அதற்காக ஒரு பெண்ணைக் கெடுக்கலாமா? பெண்களின் வாழ்க்கை பானையைப் போன்றது உடைந்தால் ஒட்டிக்கொள்ளமுடியாது. கெடுக்காதீர்கள்' என்று வேண்டிக் கேட்டுக்கொண்டேன். அவர் கேட்கவில்லை. எப்படியும் குஞ்சரத்தைத் தூக்கியே தீருவேன் என்றார். பார்ப்போம் ஒரு கை என்றேன். நீங்கள் கும்பினியார்களுடைய சிப்பாய்களைச் சந்தேகிக்க வேண்டுமென்பதற்காக அவர்களுடைய உடைகளை உங்கள் வீட்டிலும், அவருடைய வீட்டிலும் பரப்பி வைத்து விட்டு குஞ்சரத்தை தூக்கிப் போக வந்தார். அவர் கையிலே வேல் கம்பு இருந்தது. என் கையிலே பிச்சுவாளும், வெட்டு அரிவாளும் இருந்தன. அவர் நுழைந்ததை நான் பார்த்தேன், நான் நுழைந்ததை அவர் பார்க்கவில்லை. அவரோடு இன்னொருவன் வந்தான். அவன் யார் தெரியுமா? அவன் பெயரைச் சொன்னால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். தோளிலிருந்து செவியைக் கடித்துவிட்டானா என்று பல்லை நெறிப்பீர்கள்? அவன் யார்? 'அல்லி' வேலு! உங்களுடைய உப்பைத் தின்று உங்களுக்கே துரோகம் செய்யத் துணிந்துவிட்டான் அந்தத் துரோகி. அவன்தான் இப்பொழுது குஞ்சரத்தைக் கடத்திக்கொண்டு போயிருப்பவன். நிச்சயமாக இதை நீங்கள் நம்பலாம். நன்றி கெட்டவன்! இப்போது நினைத்தாலும் என் நெஞ்சு கொதிக்கிறது. அன்றுமட்டும் எனக்குத் துணையிருந்திருந்தால் அவனைப் பிணமாக்கி வைத்திருப்பேன். என் குறி தவறிவிட்டதால் அவன் சுழற்றிய பூண் பிடித்த கம்பு என் தலையில் விழுந்துவிட்டது."

சிங்கப்பெருமாளின்முகம்கொஞ்சம் ஊதிவிட்டது. பஞ்சவர்ணம் சொன்ன தகவல்களை அவர் ஊர்ஜிதப்படுத்த அவருக்கு மார்க்கமிருந்தது. கடந்த இரண்டு மூன்று நாட்களாக அவர் 'அல்லி' வேலுவைத் தேடித் தேடி அலைந்தும் அவன் அகப்படாமல் போனதற்கும் பஞ்சவர்ணம் கூறிய தகவலுக்கும் தொடர்பு இருப்பதாகவே அம்பலகாரர் கருதினார். புருவங்கள் வளைந்தன. அறிவாளிகளுக்குப் புருவம் வளைந்தால் உலகம் நன்மையடையும்; அழகான பெண்களுக்குப் புருவம் வளைந்தால் ஆபத்து 'கோரஸ்' தொடங்கும். வெறும்பணக்காரர்களுக்குப் புருவம் வளைந்தால், ஏழைகளைத் தவிர வேறு எவரையும் அந்தப் புருவத்தால் துன்புறுத்த இயலாது-சக்தியில்லை. பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பார்கள்! எல்லோருடைய பணத்திற்குமா அத்தகைய கூர்மையிருக்கிறது. பணத்தின் சக்தி, அதை யுடையவனின் புத்திக் கூர்மையை ஒட்டித்தான் பலம் பெறுகிறது.

அம்பலகாரர் புருவத்தை நெறித்தது-வளைத்தது என்ன பொருளை அடக்கியதாக இருந்தாலும் பஞ்சவர்ணத்திற்கு அந்த வளைப்பும் நெறிப்பும் ஒரே ஒரு அர்த்தத்தைத் தான் கொடுத்தது. **'ஏழைக்குறும்பு எளிதானதல்ல'** – என்பதுதான் அதன் அர்த்தம். தன்னால் முன்னுக்குக் கொண்டுவரப்பட்டவன் தனக்கு எதிரான காரியத்தைச் செய்துவிட்டால் அவன் ஏழைக்குறும்பன் என்ற பட்டத்தை பெற்றுவிடுகிறான். ஒன்பதுனாயிரம் தியாகங்களைச் செய்தவனானாலும் ஒரே ஒரு சிறு தவறில் அந்தத் தியாகங்கள் மூழ்கிவிடுகின்றன. மறுபடியும் அவை நீர்மட்டத்திற்குமேல் தலைகாட்டுவதே இல்லை. கொடிய பிராணிகள் இழையும் ஆழ் கடலைப்போல் விளங்கும் பணக்காரர்களின் உள்ளம் அடிக்கடி பொங்குவதால் – கொந்தளிப்பதால் மூழ்கியது மூழ்கியதாகவே போய்விடுகிறது. பஞ்சவர்ணம் அல்லிவேலுவைப் பற்றிச் சொன்னதும் கோபித்து, குமுறி எழுந்து, கனல் கொட்டியே பழக்கப்பட்ட அம்பலகாரரின் உள்ளம் துண்டிக்கப்பட்ட அரணைவாலைப் போல் துடித்தது.

அவருடைய கோபமும் கொதிப்பும் பஞ்சவர்ணத்திற்கு வெற்றிவேர் விசிறிகொண்டு விசிறினால் திரண்டு வரும் நறுமணக்காற்றாக இருந்தது. மனதுக்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

"நமது ஆட்களை நாலாபக்கங்களிலும் அனுப்புங்கள். அல்லிவேலுவைத் தேடச் சொல்லுங்கள். ஆளைக்கொல்லாமல் கொண்டுவர ஏற்பாடு செய்யுங்கள். நான் அவனைக் கேட்கிற கேள்விகளிலிருந்தே அவன் உண்மையைக் கக்கிவிடுவான்." என்று பஞ்சவர்ணம் கடைசியாக அம்பலகாரரிடம் சொன்னான். அப்போது அம்பலகாரரின் காவல்காரன் அருகில் வந்து நின்றான்.

"என்னடா?"

"நம்ப அல்லிவேலு அய்யா வந்திருக்காரு; வாசலிலே நிறுத்தி வச்சுப்புட்டு வந்திருக்கேன். எசமான் உத்தரவு குடுத்தா கூட்டிக்கிட்டு வர்றேன்" என்றான் காவல்காரன்.

சிங்கப்பெருமாள் காவற்காரன் சொன்னதைக் கேட்டதும், பஞ்சவர்ணத்தைப் பார்த்தார். அந்தப் பார்வையில் அர்த்தமே இல்லை. ஒரு விஷயத்தை இதயம் முடிவு கட்டினால் தான் கண்பார்வைகளுக்கு பொருள் கிடைக்கிறது. அல்லிவேலு வந்திருக்கிறான் என்றதும் அம்பலகாரர் எதுவும் புரியாமல் திகைத்தார். அதனால் தான் காரணமில்லாமல்–அர்த்தமில்லாமல் அவர் பஞ்சவர்ணத்தைப் பார்த்தார். உடனே பஞ்சவர்ணம் எழுந்து, "நல்ல சமயம்! எல்லாவற்றையும் விசாரியுங்கள். அவன் போனதும் நான் வருகிறேன். இப்போது உள்ளே ஒளிந்துகொள்கிறேன்" என்றான்.

அம்பலகாரர் அதற்குச் சம்மதித்தார். பஞ்சவர்ணம் கொல்லைப் பக்கமாகப் போனான். அல்லிவேலு உள்ளே நுழைந்தான்.

அம்பலகாரர் நிமிர்ந்து உட்கார்ந்தார். ஒருமுறை கனைத்துக்கொண்டார்.

'அல்லி'வேலு வழக்கம்போல் அம்பலகாரருக்கு வணக்கம் செலுத்தினான்.

"வாடாப்பா! என்ன ஆளையே பார்க்கமுடியல்லியே! வெளியூர் கூத்துக் கிராக்கியா?" என்று அடுக்கிக் கொண்டே போனார். அந்த 'க்ஷேம விசாரணை'யில் கர்வமும் அகங்காரமும் இலை மறை காய்களாக விளங்கின.

"ஆமாங்க: பிரான்மலைக்குப் பக்கத்திலே வையாபுரிப்பட்டி என்கிற கிராமத்திலே ஒரு புரவியெடுப்புத் திருவிழா நடந்தது. அதற்கு நான் நாடகமாடினேன். நாலு நாட்கள் கூத்து நேற்றுத்தான் வந்தேன்." என்று பவ்யமாகப் பதில் சொன்னான் அல்லிவேலு.

"ஓஹோ அப்படியா? என்ன விஷயம்? சும்மாதானே வந்தாய்?" அம்பலகாரர் கேட்டார்.

"ஐயாகிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம்னு வந்தேன். கொஞ்சம் தனிமையாக எழுந்து வந்தாத் தேவலை" என்றான். 'தேவலை' என்பது இராமனாதபுர மாவட்டத்தில் அடிக்கடி பயன்படும் சொல்! 'கொஞ்சம் நல்லது; குற்றமில்லை; பரவாயில்லை' என்ற வார்த்தைகளுக்குரிய பொருளை அதுதரும்.

அம்பலகாரர் முன்னே எழுந்து போனார். அல்லிவேலு அவரைத் தொடர்ந்தான்.

ஒரு கிழட்டு மாமரம். அதன் நிழலில், மரத்தைப் பிடித்துக்கொண்டு அம்பலகாரர் நின்றார். அல்லிவேலு இடுப்பில் துண்டைக் கட்டிக்

எஸ். எஸ். தென்னரசு

கொண்டு அடக்கத்தோடு பேசினான்.

"நம்மகுஞ்சரம்இருக்கிறஇடத்தை நான்கண்டுபிடித்துவிட்டேன். வையாபுரிப்பட்டி நாடகத்துக்கு வந்திருந்தவுங்க இந்தச் சேதியைச் சொன்னாங்க. பிரான்மலைக் கோயிலுக்குப் பின்புறத்திலே ஒரு குகை ஒன்று இருக்கிறதாம்! அந்தக் குகையிலே தான் குஞ்சரம் வைக்கப்பட்டிருக்கிறதாம். கொண்டு போய் வைத்திருப்பவன் பஞ்சவர்ணம் என்ற ஒரு வாலிபன். அவன் மான்கொம்புத் தேவருக்கு நெருங்கிய நண்பனாகஇருந்து மாறியவன். பெரிய குடும்பத்தில் பிறந்தவனும் பாடகனும் பார்வைக்கு வெகு அழகாக இருப்பானும்! அவன் ஏற்கனவே ஒரு பெண்ணைக் கெடுத்தவனும்!" என்று சொல்லிக் கொண்டே போனான் அல்லிவேலு. அவன் கதையைச் சொல்லும்போதே உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான்.

அம்பலகாரருக்குக் கண் கலங்கியது.

இப்போது காவற்காரன்கொல்லைப் பக்கமாக இருந்து அம்பலகாரர் இருந்த மரத்தடிப்பக்கம் வந்தான்.

"என்னடா! என்றார் அம்பலகாரர்.

காவல்காரன் ஒன்றும் பதில் பேசாமல் அவர் அருகில் வந்து, அல்லிவேலுக்குத் தெரியாமல் அம்பலகாரரிடம் அவனது கையை விரித்துக் காட்டினான். காவற்காரன் கையில்,

"அல்லிவேலுவை விடாதீர்கள். விசாரணை முடிந்ததும் என்னைக் கூப்பிட்டுவிடுங்கள். அவன் கூறுவது எல்லாம் பொய்"

இப்படிக்கு
பஞ்சவர்ணம்

—என்று எழுதப்பட்டிருந்தது.

– தொடரும் –

குரல் எழுப்ப வாரீர்!

★

கன்னட நாட்டில்

தி. மு. க. மாநாடுகள்

ஏப். 26, 27 தேதிகளில் பெங்களூரில்

நடைபெறுகிறது.

- 22 -

‘போதும், போதும்’ என்று ஞானசம்பந்தன் தடுத்திராவிடில் அவனுடைய ‘சொற்பொழிவு’ வளர்ந்திருக்கும்!

அன்று இரவு திருமணம் உறுதி செய்துவிடப் போகின்றார்கள் என்றறிந்ததும் ஞானசம்பந்தன் நடுங்கினான். திருமணமா- இவ்வளவு விரைவிலா வந்து சேருகின்றது என எண்ணி மருண்டான். திருமணத்தை ஆவலுடன் எதிர்நோக்க வேண்டிய வயதும் பருவமும் உடையவன் என்றாலும் அவன் நிலை அப்படி இருந்தது. திடீரென ஒரு ஐயம் அவன் உள்ளத்தில் எழுந்தது. “திருமண உறுதி, பெண் வீட்டில்தானே நடக்கும் இங்கு ஏன் நடத்துகின்றார்கள்?” என்று கேட்டான் எழிலனை.

“ஆமாம்’பா பெண் வீட்டில்தான் நடக்கும். ஆனால் என்னமோ உன் அப்பா இங்கேயே வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டாராம் அதனால்தான்” என்றான்.

அன்று இரவு கூடத்தில் ஒரே கூட்டமாக இருந்தனர் உறவினரும் ஊரவர்களும் எல்லோரும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தனர். கூடத்தில் இரண்டு ‘பெட்ரோமாக்ஸ்’ விளக்குகள் கொண்டு வந்து வைத்திருந்தார்கள். கூடம் முழுவதும் பாய் விரித்து நடுவில் இரண்டு வெள்ளிக்குத்துவிளக்கை ஏற்றி வைத்தனர். தட்டு தட்டாக பழங்களும், கற்கண்டும் பூவும் கொண்டு வந்து வைத்தார்கள். ஒரு தட்டில் பன்னீர்ச் செம்பும் சந்தனக் கிண்ணமும் கொணர்ந்து வைத்தனர். வேறு ஒரு தட்டில் வெற்றிலையும் இன்னொரு தட்டில் பாக்கும் நிரம்பியிருந்தது.

முதியவர் ஒருவர் இரண்டொரு பொன் நகைகள் இருந்த தட்டை எடுத்து பூவும் மஞ்சளும் அதில் வைத்து “இந்தாப்பா, வேலுசாமி வாங்கிக்கொள். பொன் உங்களுக்கு, பெண் எங்களுக்கு, என்று அதை நீட்டினார். வேலுசாமி என்றழைக்கப் பெற்றவரும் மகிழ்ச்சியோடு அதை வாங்கிக்கொண்டார்.

அந்த நிகழ்ச்சிமுடிந்தபின் விருந்து நடந்தது. இரண்டொருவர் ஞானசம்பந்தனை “என்ன மாப்பிள்ளை” என்று ஏதோ கேட்டனரே ஒழிய மற்றவர்கள் அவனைப்பற்றிக்கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் அனைவரும் திருமண உறுதி கேட்டால்தான் அவர்களால் என்ன சொல்லிடமுடியும். ‘பெண் பார்க்கும் படலம்’ ஏதோ நாடகம் பார்க்கும் நிகழ்ச்சியைப்போல ஒரு நாள் கூத்தாக-இல்லை. ஒரு நாழிகைக் கூத்தாகத்தான் இருக்கிறது. நாடகத்தில் ஒப்பனை செய்துகொண்டு வந்து நின்று தளுக்கி மினுக்கும் நடிகையைக் கண்டு இயற்கையிலேயே இவள் இத்தனை அழகிதான் என்று முடிவு கட்டிவிடுதல்கூடாது. நாடகத்தில் கிழவியும் குமரியாவாள்; குமரியும் கிழவியாவாள். பெண் பார்க்கும் படலத்திலும் ஒப்பனை செய்து பெண்ணையும் பிள்ளையையும் கொண்டு வந்து நிறுத்தினால் அவர்கள் ஒருவர் உடல் அழகை மற்றவர் பார்த்து உள்ளத்தைக் காண வாய்ப்பில்லாமலே ‘சரி’ என்றோ ‘வேண்டாம்’ என்றோ தலையாட்டிவிட்டுப்போகின்றனர்.

அமைந்தகரையில் பிறந்து வளர்ந்து மருத்துவப் படிப்பும் படித்துத் தேறிய அல்லியும், பொறியியல் வல்லுநனாக இருந்த அடையாறு சுப்புரத்தினமும் அப்படித்தான் ஒருவரை ஒருவர் ஒரு விருந்தில் கண்டு ‘சரி’ சொன்னார்கள். என்ன ஆயிற்று அவர்கள் வாழ்க்கை? பேராசிரியர் அதைச் சொல்லி அன்றைய தினம் எவ்வளவு வருத்தப்பட்டார்.

இந்தக் காலத்திலேயே இந்த நிலைமை என்றால் நெடுநாட்களுக்கு முன் திருமணம் என்றஉடன் ‘லட்டு போடுகின்றாயா, மைசூர் பாகு போடுகின்றாயா?’ என்றுதான் கேட்டிருப்பார்களே தவிர பிள்ளையைப் பெண்ணுக்குப் பிடித்ததா என்று கேட்டிருக்கப் போகின்றார்கள். யாரும் செய்து முடிப்பதில் ஈடுபட்டிருந்தனரேயன்றி மணமகனைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நினைக்கவில்லை.

என்ன செய்வது? இந்தக்காலத்திலேயே திருமணம் என்றால் பெண்ணைப் பெற்றவர்களும் சரி, பிள்ளைக்குப் பெற்றோர்களும் சரி, “எவ்வளவு சொத்திருக்கும்? ரொக்கம் உண்டா?” என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொள்ளுகின்றனரேயன்றி பிள்ளைக்குப் பெண்ணைப் பிடிக்குமா, பெண்ணுக்குப் பிள்ளையைப் பிடிக்குமா என்று கேட்பதாகக் காணோம். அப்படியே ஞானசம்பந்தனை ‘ஏன்’ என்று கேட்கவில்லை.

மறுநாள் காலை அவர்கள் ஒவ்வொருவராக ‘போய் வருகின்றோம்’ என்று சொல்லிக்கொண்டு போனார்கள்.

ஞானசம்பந்தன் சிவகாமி அம்மாளோடு பேச அப்போதுதான் நேரம் கிடைத்தது.

“என்ன’யா இதெல்லாம்?” என்றான்.

“எல்லாம் நல்லதற்குத்தாண்டா’ என்று அந்த அம்மாள் மகிழ்ச்சி பொங்க மகனுக்கு விடை சொன்னார்கள்,

“என்ன நல்லதற்கம்மா?” என்று விடாமல் கேட்டான் அவன்.

“எல்லாம்தானே தெரியும். நீ இரண்டு நாள் இருந்துவிட்டுப் போகலாம் அல்லவா?” என்று கேட்டார்கள்.

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எல்லாம் குழப்பமாக இருந்தது மேலும் இரண்டு நாட்கள் அங்கேயிருந்தால் ஏதேனும் தெரிந்துகொள்ள இயலும் என்றாலும் புதிய குழப்பங்கள் ஏற்பட்டால் என்ன செய்வது என்று எண்ணினான். அதனால் சென்னைக்குப் போய்விடுவதே அப்போது செய்யக்கூடியது என்று தீர்மானித்தவனாய்.

“இல்லை’மா இன்றைக்கே போக வேண்டும்” என்று முடிவாகச் சொல்லிவிட்டான். இனி அவனை வற்புறுத்த வேண்டாம் என்று எண்ணியவராய் சிவகாமி அம்மாளும் ‘சரி போய் வா’ என்று சொல்லிவிட்டார்கள்.

★

போன இடத்தில் அவன் நெடுநாட்கள் நிம்மதியோடு இருக்க இயலவில்லை. திருமணம் உறுதி செய்துவிட்டார்களே என்ற கவலையில் சோர்ந்து கிடந்தான். சோர்வு அகன்ற சிற்சில வேளைகளில் அமுதவல்லியைப்பற்றி எண்ணினான். ஒரு முறையேனும் அவளைப் போய்ப் பார்த்து வர வேண்டும் என்று எண்ணினான். ஆனால் அதற்கு வேண்டிய துணிவு அவனுக்குப் பிறக்கவில்லை. அங்கே போனால் அவள் என்னென்ன கேட்பாளோ என்ற அச்சம் வாட்டியது. கேட்டால் என்ன சொல்லுவது என்ற கவலை குடைந்தது. அமுதவல்லியிடம் ஆசையுடன் பழகிய பழக்கத்தையும் கழித்த நாட்களையும் பெற்ற இன்பத்தையும் எண்ணியெண்ணி நெடுமூச்செறிந்தான். தன்னைக் கேளாமல் கலக்காமல் தனக்குத் திருமணம்செய்திடத் துடிக்கும் தாய் தந்தையரை கொடியவர்கள் என்று கருதினான். தனக்கு நன்மை செய்வதாக எண்ணிக்கொண்டு மாளாத பெருந் துயரைத்தருகின்றனரேஎன அவர்களை நொந்துகொண்டான். என்னதான் அவன் மனம் எரிமலையானாலும் புயலின் பிறப்பிடமானாலும் இனி என்ன செய்வான் பேதை! திருமணம் உறுதி செய்கின்ற நாளில் வழக்கு மன்றத்தில் சான்று நின்றவனைப்போல் அங்கேயும் சென்றிருந்தான். இங்கேயும் சிந்தை குமுறுகின்றான். பூட்டில் தலையைக் கொடுத்துவிட்டபின் ஆட்டிற்குத் தப்ப வழியேது? வலிவு நிரம்ப இருந்தால் ஒருகால் பூட்டணாங்கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடமுடியும். ஆனால் இந்த ஆடோ தலையசைத்துவிட்டுப் பின் தள்ளாடும் வெள்ளாடுதான்!

அங்கே வெற்றிலையும் பாக்கும் கைமாறியதனை வேடிக்கை பார்த்தான்; இங்கே வேதனையுறுகின்றான். காலங்கடந்த இந்த நல்ல உணர்ச்சியினால் என்ன பயன் விளையப் போகின்றது? எதுவும் காலத்தில் கிடைத்தால்தான் பயன் விளையும். இல்லையாயின் பயன் விளையாதது மட்டுமன்றி பாழும் ஆதல் கூடும்.

ஆவலோடு திருமண நாளை எதிர்பார்க்க வேண்டிய நேரத்தில்ஏதோ தீதான செயலைக்கண்டு அஞ்சுவது போல அதைக் கண்டு நடுங்கினான். என்ன செய்வது என்று அறியாமல் சில நாட்கள் உணர்ச்சியின்றி அலைந்தான். கல்லூரிக்குப் போவதும் வருவதும் ஏதோ கடமைக்காகச் செய்தானேயன்றி வகுப்பறையில் கவனத்தோடு எதையும் கேட்டுக்கொண்டிருக்க இயலவில்லை. சிலைபோல் அசைவற்று உட்கார்ந்திருப்பான். மணி அடித்து அடுத்த வகுப்பு தொடங்கும்போது மற்ற பிள்ளைகள் எழுந்து வேறு வகுப்பறைக்குப் போனால் தானும் போவான்.

ஒரு நாள் தமிழ் வகுப்பில் ஆசிரியர் அ. பாடம் நடத்திக்கொண்டிருந்தார். அவர் வகுப்பிலும் உள்ளம் கலவாமல்தான் உட்கார்ந்திருந்தான். ஆனால் திடீரென்று ஒரு சொல் அவனை சுண்டி இழுத்தது. கனவுலகில் மிதந்துகொண்டிருந்தவன் நினைவுலகுக்கு வந்து சேர்ந்தான். தமிழாசிரியர் அ., வகுப்பில் பாடம் நடத்தும்போது வெறும் பாட்டுக்களுக்குப் பொருள் சொல்லிக்கொண்டு போகும் அகராதி ஆசிரியராக இருக்கமாட்டார்.

“நான் பாட்டுக்குப் பதப்பொருள் மட்டும் சொல்வதாயின் நீங்கள் அகராதியின் துணையைக்கொண்டே படிக்கலாம். அதற்கு நான் தேவையில்லை. ஆனால் பாட்டு ஒன்றைப் படித்தால் அதிலேயிருந்து ஏதேனும் பாடம் பெற வேண்டும்; நம்முடைய பழம் பெருமை இன்று ஏன் பாழ்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்; பண்டையப் பெருமையும் பண்பும் நம்மிடம் திரும்பவும் இடம் பெறுவதற்கு பாட்டு பாடம் புகட்டுமானால் நான் பாட்டுக்குப் பொருள் சொன்னதின் பயனைப் பெறுவேன்” என்று அடிக்கடி சொல்லுவார் அவர். சொல்லியதை செயலில் காட்டுதல் போல் அவருடைய வகுப்புகளில் அடிக்கடி தமிழனின் தனிப் பண்பின் விளக்கத்தையும், பண்டைப் பெருமையின் அருமையினையும் கேட்க இயலும். அன்றும் அப்படித்தான் ஏதோ ஒரு புராணப் பாடலுக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தார். அதில் வைதிகமுறையில் நடந்த ஒரு திருமணத்தின் ஆடம்பரம் விரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பாடலுக்குப் பொருள் சொல்லி முடித்தவுடன் மாணவர்கள் எதையோ எதிர்பார்ப்பதுபோல் நிமிர்ந்து உட்கார்ந்தனர். சிலர் புத்தகங்களை மூடிவிட்டனர். வேறு சிலர் கையில் எழுதுகோலும் தாளும் எடுத்துக் கொண்டனர் குறிப்புக்கள் எழுதுவதற்கு என்று. ஆசிரியர் அ.வின் குரலில் நல்ல உணர்ச்சி இருந்தது.

“இதுவரையில் நீங்கள் ஒரு திருமணத்தைக் கண்டீர்கள். இந்தத் திருமணம் தமிழ் மொழியில் விளக்கப்பட்டிருந்த காரணத்தினால் தமிழ் வகுப்பில் பாடம் சொன்ன காரணத்தினால் இது தமிழர் திருமணம் என்று யாராவது கருதினால் அவர் அருள்கூர்ந்து அந்த எண்ணத்தை விட்டுவிட வேண்டும். சடங்குகளுடனும், மந்திர உரைகளுடனும் நடக்கும் திருமணத்திற்கும் தமிழர்க்கும் ஏதும் தொடர்பில்லை. இந்த முறைகள் அனைத்தும் இடைக்காலத்தில் தமிழர் தம்மையே மறந்திருந்தபோது அயலவர்கள் புகுத்திய முறைகள் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இதெல்லாம் நமக்கு உரியன அல்ல எனின் வேறு எது நம்முடையது என்று அறிய நீங்கள் ஆவல் கொள்ளுவீர்கள். நம்முடையது எது என்பதனை நம்முடைய இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

- தொடரும் -

எங்கும் கிடைக்கும்

இத்தாலியில் பிறந்த ஆச்சாரியார்

16-ம் நூற்ருண்டின் இத்தாலியின் அரசியல் நிலைமை வரலாறு மறக்கவொண்ணு ஒரு மாபெரும் அரசியல் ஞானியின் அற்புத கருத்துக்களுக்கு வலிவூட்டியது. சூது, சூழ்ச்சி, சுயநலம், ஆணவம், அதிகாரத்திமிர் இத்தனையும் மொத்தமாக சேர்ந்து இத்தாலிய சமுதாயத்தின் அஸ்திவார்த்தையே ஆட்டிக்கொண்டிருந்த காலம் அது. கொலையும் கொள்ளையும் மக்களின் தோழர்களாக மகிமையோடு வாழ்ந்த காலம். வெறிபிடித்த பிரெஞ்சுக்காரர்கள் கையிலும், ஆணவம் பிடித்த ஜெர்மானியர்கள் கையிலும் திமிர்பிடித்த ஸ்பானிஷ்காரர்கள் கையிலும் இத்தாலி அகப்பட்டு சின்னுபின்னமாகி சிரழிந்து கொண்டிருந்தது. ஒற்றுமை மறந்து பிரிந்துகிடக்கும் ஆந்திரம், கர்நாடகம் போல் இத்தாலி நேபிள்ஸ், மிலான், பிளாரன்ஸ், வெனிஸ், ரோம் என்று ஐந்து பாகங்களாக பிரிக்கப்பட்டு அன்னியனுக்கு அடிமைப்பட்டு கிடந்த நேரம். இத்தாலியின் இத்தகைய பயங்கர சூழ்நிலைதான் 1469-ம் ஆண்டு பிளாரன்ஸில் பிறந்த மாக்கியவல்லியின் புதுமுறை அரசியல் தத்துவத்திற்கு விதை ஊன்றியது. டில்லியின் வஞ்சனையால் இன்று திராவிடம் நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்டு ஒற்றுமை உடைபட்டதுபோல் இத்தாலியின் ஒற்றுமையின்மைக்கு அன்றைய கிரித்துவர்களின் மத குருவான ரோம் நகரத்து போப்தான் காரணம் என்பதை மாக்கியவல்லி உணர்ந்தான்.

கி; பி. 15 13-ம் ஆண்டு தனது இருபெரும் அரசியல் புத்தகங்களான 'பிரின்ஸ்' (Prince) 'டிஸ்கோர்ஸஸ்' Discourses on the first ten books of Titus Livices) என்ற இரண்டையும் எழுதி முடித்தான். நாடுகளின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணங்களை தெளிவாகக் காட்டி அரசியல் அதிகாரத்தை எப்படி அதிகரிக்கச் செய்வது என்பதையும் மாக்கியவல்லி தெளிவுற படம் பிடித்து காட்டினுன். ஏற்றம்கொண்ட ஒரு நாட்டின் வீழ்ச்சிக்கு காரணம் யாது? அந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தை (Political Power) எப்படி அதிகரிக்கச் செய்வது என்பதை விளக்குகிருன். மாக்கியவல்லியின் அரசியல் கருத்துக்களை நாம் நான்கு பாகங்களாக பிரித்து ஒவ்வொன்றையும் தனித்தனியாக பார்ப்போம்.

(1) நேர்மையும் நாணயமும்
(2) சொத்தும் சுகமும்
(3) சட்டம் தேவை
(4) மக்கள் படை

நேர்மையும் நாணயமும் :

மக்கள் நன்மைக்காக மக்கள் நல்வாழ்விற்காக ஒரு அரசன் தீமையான வழிகளையும் கடைப்பிடிக்கலாம் என்கிருன் மாக்கியவல்லி. தீமையான வழி அல்லது ஒழுக்கத்திற்கு புறம்பான வழியாக இருந்தாலும் அதைப்பின்பற்றிஞல் மக்களுக்கு நன்மை பயக்கும், அரசியல் அதிகாரம் அதிகரிக்கும் என்று மன்னன் நினைத்தால் அத்தகைய வழிகளை பின்பற்றுவதில் தவறில்லை என்கிருன். தன்னுடைய ஆட்சி ஒழுங்காக அமைதியாக நடப்பதற்கு பஞ்சமாபாதங்களை மன்னன் கடைப்பிடிக்கலாம். ஆனுல் மக்கள் நேர்மையிலிருந்தும் ஒழுக்கத்திலிருந்தும் பிறழக்கூடாது என்கிருன். நம்பிக்கை, நாணயம், நேர்மை, ஒழுக்கம் முதலியவைகளுக்கு மக்கள் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். இவைகளுக்கு கட்டுப்படாமல் ஒரு சமுதாயம் இருந்தால் அங்கு நல்லதொரு ஆட்சிமுறையை அமைப்பது கடினம் என்கிருன். ஆகவே மாக்கியவல்லி மக்களுக்கு ஒரு நீதியும் மன்னனுக்கு ஒரு நீதியும் வகுத்திருக்கிருன். குறிக்கோளை அடைய மன்னன் பின்பற்றும் வழிமுறைகளைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. மன்னன் தன் அரசியல் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்ய எந்த வழியையும் பின்பற்றலாம் என்கிருன்.

சொத்தும் சுகமும் :

அரசாங்கம் என்பது வலிவில்லாத, தன்னை பாதுகாத்துக் கொள்ளும் திறம் இல்லாத தனிமனிதனின் அத்தகைய குணத்தின் மீது கட்டப்பட்ட ஒரு வீடு. பிறரிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள முடியாமல் அரசாங்கத்தின் உதவியை மனிதன் நாடுகிருன். இந்த அடிப்படையில்தான் அரசாங்கம் எழுந்தது. நல்லதொரு ஆட்சி நிலவ வேண்டுமாஞல் தனிமனிதனின் உடைமையையும் (Property) அவனது உயிரையும் (Life) அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். ஏனென்ருல் மனிதனின் ஆசை இந்த இரண்டையும் தான் சுற்றி அலைகிறது. உலகத்தில் தனது உயிரையும் உடமையையும்தான் மனிதன் அதிகமாக நேசிக்கிருன். உடையும் உயிரும் மனிதனின் இரத்தத்தோடு ஊறிய இரண்டுவித ஆசைகள். ஆகையால் அரசாங்கம் இவையிரண்டையும் பாதுகாக்கவேண்டும். இவையிரண்டும் பாதுகாக்கப்பட்டால் அமைதி நிலவும். ஆட்சிமுறை ஒழுங்காக நடைபெறும். அரசியல் கொந்தளிப்பு எழுவதற்கு வாய்ப்பு இல்லை என்கிருன் மாக்கியவல்லி.

சட்டம் தேவை :

மக்களின் குணநலன்களை அவர்களுக்காக மன்னன் உண்டாக்கும் சட்டம்; அரசியல் அமைப்பு இவைகளிலிருந்து கண்டுகொள்ளலாம் என்கிருன் மாக்கியவல்லி. நேர்மையும் நாணயமும் சமுதாயத்தில் வளர்வதற்கு சட்டத்தின் துணை தேவை. சீரழிந்து சின்னுபின்னமாகிப்போன ஒரு சமுதாயத்தை திருத்துவதற்கு ஒரு தனி மனிதஞல்தான் சட்டத்தின்மூலம் அதிகாரத்தின்மூலம் வழிவகைகள் செய்யமுடியும் என்கிருன். சட்டத்தை உண்டாக்கியவன் தான் நல்லதொரு சமுதாயத்தின் காவலன். ஆனுல் மன்னன் சட்டத்திற்கு அப்பாற்பட்டவன். வகுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மன்னனை கடடுப்படுத்தாது. சட்டம் நேர்மைக்கு வழிவகுத்தால் மன்னன் அதை மீறலாம். தன்னுடைய நாட்டின் அதிகாரத்தை அதிகப்படுத்துவதற்கு கொலையும் கொள்ளையும் கொடுங்கோன்மை ஆட்சியும் நடத்தலாம். ஆனுல் அப்படிச் செய்வதின் மூலம் தன்னுடை நிலையான குறிக்கோளை அடைந்துவிட வேண்டும். ஆனுல் நிலையான ஒரு அரசாங்கத்தின் வளர்ச்சி வகுக்கப்பட்ட சட்ட திட்டங்களை மக்கள் எந்த அளவிற்கு பின்பற்றுகிருர்களோ அதில்தான் அடங்கியிருக்கிறது.

மக்கள் படை

மக்கள் சமுதாயத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் அடங்கிய மக்கள் படை நாட்டிற்கு அவசியம் என்கிருன் மாக்கியவல்லி. இத்தாலி இழிநிலையை அடைந்தமைக்கு காரணம் மக்கள் படை (Citizen Army) பெருக்காமல் 'வாடகை வீரர்' (Mercenary Soldiers) களை நம்பியதுதான் என்கிருன். ஏனென்ருல் அந்த கூலி வீரர்களுக்கு நாட்டுப் பற்ருே மக்கட் பற்ருே ஒன்றும் கிடையாது. கொடுக்கின்ற தொகைக்கு வேலை செய்யும் கூலியாள்போல்உழைத்து வந்தார்கள். அவர்களுடைய கருத்து கொடுக்கும் தொகையில் தான் இருந்ததேதவிர மன்னன் நலத்தில் மக்கள் வாழ்வில் இல்லை. ஆகவே இத்தாலிய வீரர்கள் அடங்கிய ஒரு மக்கள் படை மன்னனுக்கு அவசியம் என்கிருன் மாக்கியவல்லி. 17 வயதிற்குமேல் 40 வயதிற்குட்பட்ட திடகாத்திரமுள்ளவர்களுக்கு ராணுவப்பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிருன் மாக்கியவல்லி.

குடியரசு ஆட்சி முறையை மாக்கியவல்லி வானளாவப் புகழ்ந்தாலும் அன்றைய இத்தாலியின் நிலைமைக்கு அது சாத்தியமில்லை என்பதை மாக்கியவல்லி தெளிவுற உணர்ந்திருந்தான். சிதைந்துபோன சமுதாயத்தை ஒன்றுபடுத்த கட்டுபாடில்லாமல் மனம்போன போக்கில் அலைந்த சமுதாயத்தை நேர்வழிப்படுத்த தனி மனிதன் ஒருவஞல்தான் முடியும் என்பதை மாக்கியவல்லி அறிந்துதான் மன்னன் ஆட்சிமுறை இத்தாலிக்கு தேவை என்பதை வலியுறுத்திஞன். கொலையும் கொள்ளையும் செய்யச்சொல்லித் தூண்டுகிருன் மாக்கியவல்லி. மக்கள் மனதில் தீமை என்னும் விதையைத் தூவி தத்துவம் என்னும் நீர் பாய்ச்சி வளர்க்கிருன் என்று ஆர்ப்பரித்தனர் மதவாதிகள். நாத்திகக் கொள்கைகள் என குற்றம்சாட்டப்பட்ட அவனது நூல்களுக்கு 1559ம் ஆண்டு தடை போடப்பட்டது. ஆம் இத்தாலியின் ஒற்றுமைக்காக பாடுபட்ட அவனது நூல்களுக்கு தடை விதிக்கப்பட்டது. ஆனுல் மாக்கியவல்லியின் இந்த புதுமுறை அரசியல் தத்துவம்தான் ஹிட்லருக்கும் முசோலினிக்கும் அகில உலகத்தையே நடுநடுங்கச் செய்யும் ஆற்றலை அளித்தது. இத்தாலியின் ஒற்றுமைக்காக பெரிதும் பாடுபட்ட மாஜினிகூட மாக்கியவல்லியின் மற்றைய அரசியல் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனுல் அரசியல் ஞானிகளில் மாக்கியவல்லி தலைசிறந்தவன் என்பதை வரலாறு படித்தவர் உணர்வர்.

—கு. ஜோசப் பெஸ்கி, பி. ஏ.

வெண்பாப் போட்டி-16.

ஈற்றடி :

எழுவாய் எழுவாய் இனி.

முடிவு தேதி 3-5-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

அழகு தமிழில் ஆரியம் புகுந்த விதம், காலப்போக்கில் தமிழ் கெட்ட வரலாறு, இதற்கான காரணங்கள், ஆதாரங்கள் அனைத்தும் தெளிவாகவும் சுருக்கமாகவும் இந்தக் கட்டுரையில் அடங்கி இருக்கின்றன. கட்டுரையாளர் இளந் தமிழ்ப் புலவர்; திருவையாறு தமிழ்க் கல்லூரியில் பயின்றவர்.

தமிழின் தரம் குறைந்தது ஏன்?

அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் பலவும் கடல்கோளால் அழியப் பெற்றிருக்க வேண்டும். எஞ்சியவை சிலவற்றையும் சில நயவஞ்சகர்கள் பொது மக்களை மருட்டி ஆற்றிலும் கடலிலும் இட்டு அழித்துவிட்டார்கள். இன்று நாம் காணும் தமிழில் பழம் நூல்கள் யாவும் வெகுக் கடுமையானதாக இருக்கக் காணுகின்றோம். இக்காலத் தமிழனேகூட அவற்றை எளிதில் புரிந்துகொள்ள இயலாதவாறு அவைகள் அமைந்துள்ளன. இந்த நிலை மொழி வளர்ச்சியின் உச்சகால நிலையேயாகும். இந்த உச்ச காலத்திற்கு முன்பே ஆரியர்கள் தமிழ்நாட்டில் புகுந்து தங்கள் வலிமையாலும், மக்களைப் பிரித்தாளும் திறனாலும் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றுத் தன் மொழிக் கலப்பினையும் இலக்கியத்தில்புகுத்தியிருக்க வேண்டும். இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதனை பின்வருமாறு படிப்படியாகக் கொள்ளலாம்.

ஆரியர்கள் இந்நாட்டிற்கு முதன் முதலாக வந்தபோது தனது வலிமையால் தமிழர்களை அடிமைபடுத்த முயன்றனர். தம்மைவிட வலிமை மிகுந்த தமிழனை தம்மால் வெல்ல முடியாது என்பதனைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அதிக காலம் பிடிக்கவில்லை. எனவே, அவர்கள் அரசர்களையும் செல்வந்தர்களையும் அணுகினார்கள். சேனைத் தலைவர்களாகவும் மந்திரிகளாகவும் அமர்ந்து அரசனை இயக்கும் ஆதிக்கம் பெற்றார்கள். அரசர்களைமட்டும் "க்ஷத்திரியர்கள்" என்றழைத்துப் பெருமைப்படுத்தினார்கள்.

மற்றும் அக்காலத்தில் வலிமையுடன் விளங்கி வந்தவர்கள் பாளையக்காரர்களும் புதுக்கோட்டை இராமநாதபுரத்து இராசாக்களும் ஆவர். அன்னோர் பெருஞ் செல்வராயும் மக்களின் ஆதரவாளர்களாயும் இருந்தனர். அவர்களின் ஆதரவு பெறும் எண்ணத்தில், ஆரியர்கள் அவர்களை 'தேவர்' எனவும், 'வர்மா' எனவும் பட்டப் பெயரிட்டு, பிறகு தன்னுடைய இனமாகவே சேர்த்துக்கொண்டார்கள்.

அதன் பயனாக பூணூலும் அரசர்களுக்கு அளிக்கப்பட்டது. "அரசனே! உங்கள் மரபுமட்டும் உயர்ந்தது; மற்றவர்கள் யாவரும் ஆண்டவனால் உமக்குக் கொடுக்கப்பட்ட அடிமைகள்" என்ற நஞ்சைப் பாய்ச்சினர். 'முற்படைப்பதனில் வேறாகிய முறைமைபோல் நால்வகைச் சாதி யிந்நாட்டினில் நீர் நாட்டினிர்" என்று கபில ரகவல் முழக்கமிடுவதும் இது குறித்தே. என்ன அலங்கோலம்! ஒரு குடியிற் பிறந்து தொழில் செம்மையாக நடைபெறும் பொருட்டு அரசனாகிய ஒருவனுக்கு ஏனையோர்கள் அடிமையாம்! அவர்கள் வேறு சாதியாம்!

அதன் பயனாக மன்னன் க்ஷத்திரியனானன். ஏனையோர் சூத்திரர்களானார்கள். சூத்திரர் என்ற சொல்லின் உண்மைப் பொருள் அடிமை என்பதே. ஆயின் மக்களின் எதிர்ப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் பொருட்டு, 'உங்களின் மதிப்பிற்குரியதோர் பட்டப் பெயர்' என்றே மக்களை ஏமாற்றி, அவர்களை அந்தப் பட்டத்தை விரும்பி சூட்டிக்கொள்ளுமாறு மிரட்டினர்.

அதன் பிறகு நாட்டுப் பண்பாடுகளில் தமது பண்பாடுகளை கலக்கும் துறையில் முனைந்தனர். திருமணச் சடங்குகளும் நாள் வேளைகளும் நுழைக்கப்பெற்றன. அவைகளையெல்லாம் நடத்துவிக்க தாமே தலைவர் என்று தமக்கோர் நிலையான வருமானத்தையும் தேடிக்கொண்டனர். அவைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளும்படியாகவும் செய்தனர். நாங்கள்தான் உங்கள் எல்லோருக்கும் தலைவர்கள் என்றும், உங்களை மேற்பார்வையிடுபவர்கள் என்றும் கூறிக்கொண்டனர். இதற்கெல்லாம் மக்களின் ஆதரவு பெற்ற அரசர்களும் பாளையக்காரர்களும்கூட துணையாக அமைந்துவிட்டனர். அந்த அளவுக்கு ஆரியர்கள் அவர்களை மயக்கிவிட்டிருந்தனர். அதன் பயனாகத்தான் ஐயர் (தலைவர்) பார்ப்பனர் (மேற்பார்வையாளர்) என்ற பட்டங்களையும் இட்டுக்கொண்டனர். அதற்குமுன் இந்தப் பெயர்கள் அவர்களுக்கு உரியதல்ல!

தமிழர்களின் பண்பாட்டில் தலையிட்டு கலப்பு ஏற்படுத்திய பிறகு ஆரியர்கள் அதோடு நின்றுவிடவில்லை. வடமொழித் தமிழ் மொழியில் சிறுகச் சிறுக கலக்க ஆரம்பித்தது. தமிழர்கள் இன்றுபோலவே என்றும் புதுமையில் நாட்டம் கொண்டவர்கள்தான்! புதுமை என்ற மயக்கம் நன்மையேஅளித்து வந்தபோதிலும் அது தீமைகள் விளைப்பதையும் தவறவிடுவதில்லை. அதன்படி புதுக் கொள்கைகளையும் பண்பாடுகளையும் போற்றி மேற்கொண்டவர்கள் வடவர்களின் கதைகளையும் கற்பனைகளையும் நம்பினர். செவியை இனிமையாக்கியப்பின், மனிதனையே தன்னுடையவனாக்கிக்கொள்ளலாம் என்ற உண்மை வீண் போகவில்லை! ஆரியர்களை தலைவர்களாகவும் குருக்களாகவும் வழிபடத்தொடங்கிவிட்டார்கள் திருவிடத்தார்.

தமிழ் மக்களில் நன்கு கற்றறிந்தவர்கள்கூட இந்தப் புது மயக்கத்தில் நிலையிழந்தார்கள். அவர்களும் கற்பனைகளையும் கதைகளையும் நம்பத் தலைப்பட்டனர். தாமியற்றிய நூல்களிலும் பாடல்களிலும் புதுமைப் பண்பாடும் வடமொழியும் நுழைக்கப்பெற்றது. அதன்படிதான் அகநானூற்றில் திருமணவருணனையொன்று ஆரிய முறைப்படி வருணனை செய்யப்பட்டிருக்கக் காண்கின்றோம். நாள் கணக்கிடுவதும் நல்ல காலம் பார்ப்பதும் இலக்கியத்திலும் காணப்படும் பண்பாடாகிவிட்டது. உலகப் பொதுநூல் திருக்குறளிலும் இந்தக் கலப்பை காணமுடியாமலிருக்க முடியவில்லை.

இவை ஆரியக் கலப்பின் தொன்மையை நன்கு விலக்குவனவாகும்.

தென்னாடுகளில் எந்த வளர்ச்சியும் வெகு மெதுவாகவே நிகழ்கின்றன என்று கால்டுவெல் போன்றவர்கள் கருதுகின்றனர். ஆரிய சொற்கள் தமிழ்மொழியில் மருவிய பிறகு வெகு அதிகமானத் திரிபு அடைந்திருக்கக் காணுகின்றோம். இப்பொழுதுள்ள இலக்கியங்களின் தொன்மையான அந்நூற்களில்ஆரியரின் 'கருமன்' என்ற சொல் 'கம்' எனவும் 'ஸ்ரீ' என்ற சொல், 'திரு' என்றும் வருகின்றது. இந்த அளவு வேறுபாடு காணப்படுவது என்பது, அம்மொழி தமிழில் கலந்த கலப்பின் தொன்மையை விளக்குவனவாகும். ஆக இப்பொழுதுள்ள இலக்கியங்களில் இடைக்கால இலக்கியங்களில்தான் வடச் சொற்கள் அப்படியே கையாளப்பட்டுள்ளன. 11-ம் நூற்றுண்டு முதல் 16-ம் நூற்றுண்டு வரையுள்ள காலத்தையே இந்த இடைக்காலமாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். இக்காலத்தில் 'ராஜ,' 'மோகம்' முதலிய வடசொற்கள் மாற்றமின்றி அப்படியே பயின்று வரக் காணுகின்றோம்.

இதே நிலை இன்றைய சங்க நூல்களுக்கு வெகு காலத்துக்குமுன்பே இருந்திருக்க வேண்டும். இன்று சங்க நூல்களில் 'கன்மம்' என்றும் 'திரு' என்றும் வரும் சொற்கள் வட சொல்லாகிய 'கர்மன்' என்றும் 'ஸ்ரீ' என்றும், அப்படியே ஒரு காலத்தில் கலந்திருக்க வேண்டுமன்றோ? அது நாளடைவில் வழக்குப் பயிற்சி மிகுதியான 'கம்-கன்மம்-கர்மம்-கருமம்' என்றும், 'ஸ்ரீ-திரு' என்றும் படிப்படியாக மாறி மாறி வந்திருக்க வேண்டும்.

அப்படியெல்லாம் மருவி வந்தவைகள் பயின்ற நூற்கள் எங்கே? அவைகள் தாம் கிடைக்கப் பெறவில்லை. 'வாரணம் கொண்ட தந்தோ வழி வழிப் பெயரும் மாள' என்று கதறும்வண்ணம் அவைகள் கடலிம் புக்கு ஒழிந்தன! ஏனையவும் சிலரால் அழிக்கப்பெற்றன. அந்த நூல்களில்தான் உண்மையான தமிழரின் பண்பாடுகளும் நாகரீகங்களும் உள்ள நிலைகள் பலவும் காணலாம்.

பல இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து உயர்ந்த பிறகேமொழிக்கு இலக்கணம் தோன்றுவது முறையாகும். இதுவரையுள்ள உலக மொழிகள் யாவும் இந்த அடிப்படையில்தான் வந்துள்ளன. 'எள்ளினின்று எண்ணெய் எடுபடுவது போல' இலக்கியத்தினின்றும் எடுபடுவது இலக்கணம் என்பர் அகத்தியரும்.

ஆனால் நமது மொழியின் முதல் நூல் என்று சொல்லிக்கொள்ளும் போது முதல் முதல் இலக்கணத்தைத்தான் சொல்ல வேண்டியதாய் உள்ளது. இது ஆச்சரியப்படத்தக்க முறையில் அமைந்திருந்தாலும், அதன் உண்மை என்னவென்றால் அதற்குமுன்பு வெகு காலங்களுக்கு முன்பே தமிழ்மொழி பண்பட்ட வளர்ச்சியைப் பெற்று திகழ்ந்து ஒளிர்ந்தது என்பதைக் காட்டுகின்றது. அதில் களவுக்கும் கற்புக்கும் என்று ஐந்திணை ஒழுக்க இலக்கணங்கள் வகுக்கப் பெற்றுள்ளன. இது தமிழரின் தனிப் பண்பு. ஆரியக் கொள்கைகள் இடையில் புகுந்தனவற்றை, 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்-ஐயர் யாத்தனர் கரணமென்ப' என்று குறிப்பாகத் தொல்காப்பியம் பேசுகின்றது. அவற்றுள் கூறப்படுவன யாவும் தமிழரின் ஒழுகலாறே! சிலர் அகப் பொருள்களில் புனைந்துரைகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பர். அஃது எவ்வாற்றானும் பொருந்துவதன்று. இலக்கியம் என்பது வாழ்வின் இலக்கியத்தினின்று எடுக்கப்பட்ட இலக்கணத்தில் கூறப்பட்டுள்ளன யாவும் உண்மையே. தொல்காப்பிய காலத்திற்கும் பல்லாயிர ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரிடத்தில் மருவி வந்த பண்பாடுகளே அவை! அவைகள் புனைந்துரைகளாயின் ஆசிரியர், முதலிலேயே 'புனைவும் நினைவும் சேர்த்துச் செய்யப் பெற்றன' என்று தயங்காத கூறுவர். அவர் அவ்வியல்பினரே. பின்னும் 'பண்ணைத் தோன்றிய' என்று, 'மெய்ப்பாடுகள் விளையாட்டாயத்தின்-கண் தோன்றும்' என்று அவர் பின்வாங்காது கூறுதல் அதற்கோர் சான்று!

இன்னோரன்ன பண்பாடுகளைச் செவ்விதின்யுரைத்து ஆரியப் பண்பாட்டு நுழைவுக்கு இடமில்லா நூல்கள் பலவாக மல்கி ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்திய கடுநடைத் தமிழ் ஒரு காலத்தில் எளியனவாக இருந்து வளர்ந்தனவேயாகும். அவ்வாறு வளர்ச்சி பெற்ற காலத்து எளிமையான நூல்கள் பல படிப்படியாக வளர்ச்சியைக் காட்டிக்கொண்டு பலவாக மலிந்திருக்க வேண்டும்.

இவைகளையெல்லாம் வடவர்கள் தமது ஆதிக்கத்திற்கு இடம் வேண்டி அழிக்க முற்பட்டு அக்காரியங்களைச் செய்தனர் என்பதில் வியப்பில்லை! கடல் கோளால்மட்டும் நூல்கள் அனைத்தையும் அழித்திடல் இயலா. உள்நாடுகளிலும் நூலின் படிகள் சிலவாவது பயின்றிருத்தல் ஒருதலை. அக்காலை அந்நூல்கலை கடலானது யாங்ஙனம் அழித்திருக்க ஒல்லும்? அவைகள் எல்லாம் சூழ்ச்சிகளால்தான் கடவிடப்பட்டு அழிக்கப்பட்டிருத்தல் கூடும். அசோகரின் புத்தமதக் கொள்கையை எதிர்த்து அவரையே அழிக்க திட்டமிட்ட அத்திருக்கூட்டம் இவ்வேலையைச் செய்தது என்று சொல்வதில் தவறில்லை. அத்துடன் அமையவில்லை அதன் பணிகள்.

கதைகள் பல புனைந்தனர். அகத்தியனையும் ஆண்டவனையும் உண்டாக்கி, தமிழரின் இமிழிசையோடு தொடர்பாக்கி, ஆண்டவனையும் அகத்தியனையும் வடவராக்கி, ஆண்டிருந்தும் தென்னாடு போந்து தமிழாக்கினார் என்றும், தமிழ் வளர்த்தார் என்றும் பல புனைவுகள் சேர்த்து தொடுக்கப்பட்டனவும், அப்புனைவுகள் இன்றளவும்நிலைத்து நிற்பனவும் வியப்பினும் வியப்பே! அகத்தியர் என்றொரு தமிழறிஞர் இருந்தார் எனினும், அவரை வடவராக்கியதும் கடவுளின் கட்டளைக்கு அடிபணிந்து தமிழ் வளர்த்ததும் கற்பனையே, உண்மையன்று. கடவுள் மொழியை உண்டாக்கினார் என்பதனை அறிவுடையார் யாரும் நகைப்பர், மொழி நூலறிஞர்களுக்கும் இது உடன்பாடே.

—மலர்விழி

வெண்பாப் போட்டி

15. நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

நாடினன் என்னை; நம்பினேன் சண்டாளி;
கூடினன் என்னை; கூறுவதென் ?—ஓடினன்;
பாரத்தால் நோகுதே பாழ்வயிறு; பார்சிரிக்கும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—மா. சுப்பையா, நாரைக்கிணறு,

❁

கணக்கிலே நூறுகுறி கண்டிப்பாய் வேண்டுமென
குணமுள்ள ஆசிரியர் கேட்டார்—இணக்கமுடன்
தேர்வெழுதச் சென்றேன்றும் தோன்றாமல், வீணான
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—சுப்பிரமணியன், பொன்னேரி.

❁

தந்த உறுதிகளைச் சட்டைசெயா ஆட்சியையும்,
சொந்த மொழிபேணாத் துட்டரையும்,—'வந்தார்'க்குச்
சீரளிக்கும் வம்பரையும் சிந்திக்க முந்துகிற
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1

❁

கண்டோம் கருத்தொத்தோங் கொண்டோங் களவுநெறி
கண்டே கலைத்திடுதல் கண்ணியமோ—என்னத்தான்
சீரழகு என்னுடலைச் சேர்த்தின்பங் காணவரு
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—தங்கை-மணியம், உடுமலைப்போட்டை.

❁

ஈழத்தில் மக்களை ஈவிரக்க மின்றிதினம்
யாழ வருத்துகின்றார்; மாய்க்கின்றார்— ஆழிஆழ்
பாருக்குள் பார்ப்பதற்கு யாருமின்றி யல்லலுறும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—நம்பி, செய்துங்கநல்லூர்.

❁

'கண்ணே' எனக்கனிவார்; கைவிலக்கி மேல்நடப்பேன்
'பெண்ணே' எனச்சினப்பார்; பெய்திடுவேன்—விண்ணடியில்
பாராய் பரிதிஎன்பார்; பாய்ந்தணைப்பேன் வாராரோ
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—முத்துநிலா, திண்ணனூர்.

❁

கல்லை அடுப்பாக்கிக் கண்டசிறு சுள்ளிகளை
மெல்ல விறகாக்கித் தீயேற்றி—புல்லரிசி
நீரிட்டேன் என்றாலும் நீண்டகொதி வாராத
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—புலவர்-பூங்குன்றன், திண்டிவனம்.

❁

கொண்டான் நலம்பேணும் கோதில்லாள் கற்பிலன்பில்
கண்டால் கவலையெல்லாம் காற்றாகும்;—இன்னுணவில்
சோரமில்லாள் பீடுதந்த தூமதியாள் இல்லாஇந்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—அ. வே. காசிநாதன், ஏயார்கோட்டை.

❁

மானம் பெரிதாய் மதித்தார் மறத்தமிழர்
ஈனவட நாட்டினரோ இன்தமிழர்—மானத்தைப்
பேரந்தான் பேசுகின்றார் ! இந்நிலையை எண்ணுகின்ற
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—க. புத்தூரான், க. புதுப்பட்டி.

❁

ஆரத் தழுவிஎனை அன்போடு முத்தமிட்டு
சேர நினைத்துபொருள் சேர்க்கும்—காரணமாய்
சோரவிட்டு ஆவிதனை சொல்லிஅவர் சென்றிடுமிந்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

நா. கந்தசாமி, காரைக்கால்.

❁

கேட்டால் மனங்குளிரும் கீர்த்தியுள்ள செந்தமிழின்
ஊட்டம் உலகறியும் உண்மையினைப்—பாட்டறியும்
வீரத்தால் சொன்னாலும் 'வெண்பா' முடிபறியும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—கும்பகோணத்தான், வசந்தபுரம்.

❁

உன்னூரின் எல்லை ஒளிமறையும் வேளை
எதிர்பார்ப்பேன் என்றாரே என்னவாய் ?—ஓரிருகல்
தூரத்தால் தாமதமோ தொல்லையோ ஆகின்ற
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—புள்ளரசு, கல்லிடைக்குறிச்சி.

❁

உன்னைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு நாழிகையும்
என்னுயிர் தேய்க்கும் இரும்பென்று—சொன்னவர்தாம்
சேர மறுக்கின்றார் சேடி ! அதைநினைக்கும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—திருமணி, சென்னை.

❁

திறம்வளர்த்துப் போராடும் தேவையிலே பண்டு
அறம்வளர்த்த நாமுள்ளோம் இன்று—அறிவியலாம்
வீரத்தால் பார்பெற்ற வெற்றிகளைத் தேராத
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—தே. அறிவுடைநம்பி, சென்னை-10

❁

மணமாகி திங்கள் பலவாகிப் போயும்
குணமோடு கொஞ்சிக் குலாவி—அணைத்திடத்தன்
பேருக் கொருபிள்ளை பெற்றின்பம் காணாத
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—வே. காந்திநாதன், பட்டமங்கலம்.

❁

மானம் பெரிதென்று வாழ்ந்த மறத்தமிழர்
ஈனம் உருமாறு மிந்நாளில்—மானேநல்
வீரம் அறிவிழந்து வடவர் தமைக்கெஞ்சும்
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—குகன்குருசாமி, கமுதி.

❁

போய்வெளியில் வேலைதேட பேய்மழையோ ஓயவில்லை
காய்பசியால் சேய்களுமே வாடலுற்றுத்—தாய்முகத்தைப்
பார்த்திருக்க தாயவளும் பார்க்கவென்னை எந்தனுக்கோ
நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

—செய்கை-எ. கலியன்பன், திருவையாறு.

பாரிஸ் அழகிகள்
கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10. 24 படங்கள் ரூ. 7. முன் பணம் அனுப்புக. தபாற்செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது
வீனஸ் டிரேடிங் கம்பெனி (தெ.)
தபால் பெட்டி 1693, சென்னை-1.

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
PROP: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு